**கவனிக்க.-** *18.05.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1760 - 2012 මැයි මස 25 වැනි සිකුරාදා - 2012.05.25**

*1760 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 598 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 598 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) *துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *இலங்கை கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *நிதி சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி* V *இல் 2008 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி-மாச்சு) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2012, யூன் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மே மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# அரசாங்க அறிவித்தல்கள்

## முல்லைத்தீவு மாவட்டம், வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் - 2012

மேற்படி பொங்கல் உற்சவம் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி முற்பகல் 6.00 மணிக்கு ஆரம்பமாகி 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முடிவடையும் என்பது பொது மக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

2. 1949.05.27 ஆந் திகதியும் 9978 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 1950.05.26 ஆந் திகதியும் 10105 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

3. மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்சவத்தின்போது அமுல்படுத்தப்படும்.

நா. வேதநாயகன்,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்.
முல்லைத்தீவு மாவட்டம்.

2012, ஏப்பிறல்.

5-543

## மாத்தறை தொட்டமுனை பொசன் மஹா பெரஹரா

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் நடாத்தப்பட்டு வரும் 2012 ஆம் ஆண்டுக்கான பொசன் மஹா பெரஹரா 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி நடாத்தப்படும் என யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் (175 ஆம் அத்தியாயம்) 1959 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட 11959 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளைகளின் 10 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவியத்தருகின்றேன்.

பீ. ரணவீர,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2012, மே 8.

5-620

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

### 394 (3) ஆம் பிரிவின் கீழான "கன்டிநென்டல் எக்ஸ்போ (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2009.05.25 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "கன்டிநென்டல் எக்ஸ்போ (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் "கன்டிநென்டல் எக்ஸ்போ (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 67886
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2012, ஏப்பிறல் 25.

5- 544

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

### 394 (3) ஆம் பிரிவின் கீழான "சிங்கபூர் பைலிங் என்ட் பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.10.04 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "சிங்கபூர் பைலிங் என்ட் பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "சிங்கபூர் பைலிங் என்ட் பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 61606
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2012, ஏப்பிறல் 25.

5- 542

**இலங்கை வங்கி**

*1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

2012.03.22 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது-

''பிரசித்த நொத்தாரிசு திரு. என். ரி. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2011.06.29, ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1423 இன் பேரில் இல. 10/23D, அகரதகுரு மாவத்தை, ஏகல ஜாஎல என்னும் முகவரியைச் சேர்ந்த பெர்னான்டோ ரெப்ரிகிரேஷன் அன்ட் எயா கண்டிஷனிங் வர்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து (கம்பனிப் பணிப்பாளர்கள் திரு. வர்ணகுலசூரிய சுரேஷ் அனுஜா பெர்ணாண்டோ மற்றும் திருமதி ஹெட்டிஆரச்சிகே திரேஸ் அனுஷியா தி சில்வா) முதலும் 2012.02.23 வரை வட்டியும் எண்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று எழுபது ரூபா நான்கு சதம் (ரூ. 85,52,870.04) அத்துடன் எண்பத்தொரு இலட்சத்து எழுபதாயிரத்து நாநூற்று எண்பதைந்து ரூபா எண்பத்திரண்டு சதங்களில் (ரூ. 81,70,485.82) ஆண்டுக்கு பதினேழு பதினேழு தசம் ஐந்து சைபர் (17.50%) வீதத்தில் 2012.02.24 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

''பிரசித்த நொத்தாரிசு திரு. என். ரி. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2011.06.29, ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1423 இன் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட எண்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று எழுபது ரூபா நான்கு சதம் (ரூ. 85,52,870.04) அத்துடன் 2012.02.24 தொடக்கம் விற்பனைத் திகதிவரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹாரை மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம்19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக் கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவிற்கு அமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி ஜாஎல மேற்தரக் கிளை அறவிடல்கள் உத்தியோகத்தர்/கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை ராகம்பற்றுவில் ஜாஎல பிரதேச சபை எல்லையில் தந்துகம உப அலுவலகத்தில் ஏகலயில் அமைந்த அகரதகுரு மாவத்தை வரிமதிப்பிலக்கம் 38 ஐக் கொண்டதும் 'ஏகல எஸ்டேற்'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. என். ரி. பெரேரா தயாரித்த 2008, செத்தெம்பர் 03 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5780 இல் விபரித்த துண்டு P என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. ஜே வி. பெரேரா தயாரித்த வரைபடம் இல. 7257 இல் விபரித்த துண்டு Y உம் ; கிழக்கில் : அதே காணியின் துண்டு 12B உம் ; தெற்கில் : அகரதகுரு மாவத்தையும் ; மேற்கில் : 20 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்டதும் (மேற்குறித்த வரைபடம் இல. 7257 இல் விபரித்த துண்டு Z ) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 5780 இன் படி ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் வளர்பவையும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் B227/ 212 இல் பதிவு செய்யப்பட்டது.

துண்டு P அடையாளமிட்ட மேற்குறித்த காணித்துண்டு பின்வரும் காணியின் ஒரு மீளளவை ஆகும் :-

மேற்குறித்த ஏகலையில் அமைந்த அகரதகுரு மாவத்தை வரிமதிப்பிலக்கம் 38 ஐக் கொண்டதும் 'ஏகல எஸ்டேற்'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. ஜே. வி. பெரேரா தயாரித்த 1982, செத்தெம்பர் 20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 6768 இல் விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : அதே காணியின் மீதிப்பாகமும் ; கிழக்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. யூ. ஐ. நாணாயக்கார தயாரித்த 1976, மாச்சு 08 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 337 இல் விபரித்த துண்டு 13B உம் ; தெற்கில் : வீ. சீ. ரோட்டும் ; மேற்கில் : அதே காணியின் மீதிப்பாகமும் எல்லைகளாகக் கொண்ட மேற்குறித்த வரைபடம் இல. 6768 இன்படி ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் B227/212 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரி. எம். யூ. சேனாநாயக்க,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஜாஎல மேற்தரக் கிளை.

5-548